

# கவிஞர் க. இரவிக்குமார்.

செங்கை மாவட்டம், ஆர்ப்பாக்கத்தைப் பூர்வீகமாகக் கொண்ட இவர், தற்போது, சென்னையில் வசித்து வருகிறார். நல்மனம் பூண்ட தந்தைக்கும் ஓர் ஆசிரியைக்கும் மகனாகப் பிறந்த இவர், ஒரு செவ்விய சிந்தனையாளர். தயக்கமின்றி, தனது சிந்தனைகளை, கவிதையாக வடிக்கும் வல்லமைக் கொண்டவர்.

கிட்டதட்ட, சற்றியலிஸ கோட்பாடு உடையவர் போல் இவரது எழுத்துக்கள் இவரை நமக்கு அடையாளப் படுத்தும். ஒவ்வொரு சம்பவத்துக்கும் இயன் நிலையோடு கவிதை வடிப்பார். கவிதைகள், தாளகதியோடு, யாப்பமைதியுடன் காணாப்பட்டாலும், இவரது கவிதைகள் புதுக்கவிதை போன்று தோற்றமும் பொலிவும் கொண்டு விளங்குகின்றன. இனி தொடர்ந்து இவரது கவிதைகளைப் படித்துச் சுவையுங்கள்.



## ஓணத்திற்கு வாழ்த்து

மூன்றிலே ஒன்று ஆனவன், (விஷ்ணு)
மூவுலகம் காத்து நின்றவன்;
மூவெழுத்து (மாவலி) மன்னனிடம்,
மூன்றடி மண் முழுதாய்க் கேட்க,
மூன்றாமடி வைக்க மூன்றைத் (சிரசு) தந்தான்!
மூவெழுத்து(வாமன) கொண்ட அவதாரனோ,
மூன்றை (முக்தி) தானுவந்து தந்தான்!
மூவேந்தர் (சேர,சோழ,பாண்டி) நாடிலொன்று உண்டாம்!
முக்கடவுளர் உறையும் தேசமன்றோ
மும்மதங்களும் ஒன்றிக் கொண்டாட,
மண்ணிலே மலர்ந்த மூன்றன்றோ (ஓணம்)

மனம் கனிந்து வாழ்த்துகின்றோம்! - 31-08-2020

## தத்துவங்கள்

காற்று நின்று வெற்று உடலாய்க் கிடந்தான்
உற்றவரும் சுற்றத்தாரும் கூடி நின்று அழுதார்
மாற்று கருத்துக் கொண்டவரும்
பேரைச் சொல்லி பேறைத் தூக்கி
நிறைதனை நிறையச் சொன்னார்
காதறுந்த ஊசியும் காணாது கடை வழிக்கே
போதனையை நினைவு கூர்ந்தார்
காடுவரை சென்றவர்கள்
கண்எதிரே ஊணதுவும்
சாம்பலாதல் கண்டபோதும்
வீடுவந்து சென்றதுமே
வேறு உணர்வில் வீழ்ந்தார்
கொடுத்ததென்ன வாங்கியதென்ன
அடுத்தடுத்து குறிப்புகளை
தொடுத்தெடுத்து முடித்தார்
சூழ்ந்து நின்று சொத்தை ஆராய்ந்தார்
வாழ்ந்து நின்ற போது வைத்ததென்ன
பத்திரங்களை ஆய்ந்தார்
யாருக்கென்ன பங்கு என்று
ஊர்சொல்லும் நியாயத்தை
ஊன்றி அவர் சொல்லி நின்றார்
வருவதைவிட வாங்கியது அதிகமென்றால்
வந்தவர்கள் சந்தடியின்றி
நொந்து கொண்டே சென்றார்
முத்து போன்ற தத்துவங்கள்
செத்துப் போன மனிதர்க்கன்றி
நித்தமது வாழுகின்ற மனிதர்க்கில்லை
சத்திரம் போல் வாழ்க்கையதில்
நித்திலம் போல் வாழ்ந்துவிடு
தத்துவம் இதுவே தழைக்கின்ற பூமியிது!

## தாயாய் வருவாய்!

பொய்யென்று உணர்ந்தும்
மெய் வளர்த்தேன்
மெய்யென்று அறிந்தும்
பொய் உரைத்தேன்
வேயாத கூரை கீழ்
வெயில் தவிர்த்தேன்
பாயாத நதியில் குதித்து
பாய்மரத்தை விரித்தேன்
சீயான் சொன்ன வழி மறந்து
ஓயாது ஓடி நல்வாழ்வு துறந்து
மாயவலையில் மனம் மயங்கி
சேயாகித் துவண்டு அழுதேன்
ஆயிழையாய் அனுதினம் ஆகுதே
சேயிழையாய் வாழ்வு மிளிருமோ
நோய் வந்து நொந்து கிடந்து
பாயில் படுத்து பொழுதும் சோர்ந்து
காயம் காய்ந்து வற்றி
வாயும் குழறி மாயுமுன்
தாயாய் வந்து என்னை
நீயே தாங்குவாய் தினமே
------------- இரவிக்குமார்
18-08-2020

## ஆகமம் எனும் சமத்துவம்

ஆண்டவனை ஆலயத்தில் இருத்தி
ஆண்டவர்கள் ஆகமத்தை வகுக்க
அர்ச்சனா மண்டபத்தில் அவனிருக்க
அர்த்த மண்டபத்தில் அர்ச்சகரிருக்க
அகமண்டபத்தில் அரசர்கள் நிற்க
முகமண்டபத்தில் பிரபுக்கள் கூட
மகாமண்டபத்தில் பிறகுடிகள் குவிய
கொடிமரம் கம்பீரமாய் நிமிர்ந்திருக்க
நந்திகூட நளினமாய் அமர்ந்திருக்க
நந்தனார்கள் வெளியில் நின்றார்
ஆகமத்தின் இலவச இணைப்பாய்
உற்சவர்கள் வெளியே உலாவர
உற்சாகமாய் சமத்துவ ஆகமங்கே
உண்மை உணர்வுடனே பூத்ததப்பா
10-02-2019





# சுதந்திர தினம்

குடிக்க நீரும் காசிலாது
குறையிலாது கிடைக்குதா

காற்றுமது எங்கும் மாசிலாது
கடிதாய் சுவாசம் போனதே

கல்வி கற்க விலையிலாது
கடினமின்றி இன்று விழையுதா

கலவி அறிவும் மாண்பிலாது
கடைச் சரக்காய் போனதே

ஏழ்மை இன்று ஒழிந்ததா
ஏற்றம் இங்கு நிறைந்ததா

மாற்றம் தேடி நின்ற செற்றம்
மண்ணில் புதைந்து மறைந்ததே

தீவிரவாதங்கள் எங்கும் நிலவி
தீவிர வாதங்கள் தினந் தொடருதே

பெண்ணடிமைத் துயர் மீளாது
மண்ணின் பெருமை உயர்ந்ததா

இனமெனும் பெருமைதனை

எறிதழலால் சாய்க்கிறாரே

மதமெனும் வெறிகொண்டு
மனிதர்கள் மாய்கிறாரே

மதங்கள் ஒற்றுமை பேணாது
மனிதம் தம்மை மறந்ததே

பதவியெனும் மமதை கண்டு
பவித்திரத்தை இழக்கிறாரே

அரசியல் நேர்மை அரிதாகி
அறியாமை இருள் சூழ்ந்ததே

விவசாயம் இலாது மண்ணில் ஒரு
சாயமும் ஒளிர்ந்து மின்னுமோ

நாடு ஒன்று நாமதன் மக்கள்
ஈடு இணையற்று ஆக்கமாய்

பீடு நடை போட நமைப் பிடித்த
பீடைகள் நமைவிட்டு பறந்தோட

நாளை விடியல் நமக்கென
நாளாம் சுதந்திர தினத்தன்று

ஆளுமை போற்ற சூளுரைத்து
ஆர்வமாய் கொடியேற்றுவோம்

---------------- இரவிக்குமார்

**15-08-2020**



# கண்ணா!

வான் மழை நீ மழை காக்கும் குடையும் நீ
தேனடை நீ தேனெடுக்கும் மலை வேடுவரும் நீ
கவுரவரும் நீ பாண்டவரும் நீ
அம்பாரத்தில் அம்பும் நீ
பாரதத்தில் அழிக்கும் வில்லும் நீ
வஞ்சகத்தின் வடிவும் நீ
இச்சகத்தை என்றும் காக்கும்
நேர்மையும் நீ
அவரவர் புண்ணியமும் நீ
பாவமும் நீ
கடலலையும் நீ அதைக் கடக்க கப்பலும் நீ
உடலும் நீ அதில் ஒட்டிய
உயிரும் நீ
உயிர்நீங்கின் பிணமும் நீ
புதைப்பின் புழுவுக்கு உணவும் நீ
உண்டபுழு மண்ணுக்கு உரமாயும் நீ
எண்ணிய எண்ணமும் நீ
இயங்குகின்ற இயக்கமும் நீ
காலச் சுழற்சியின் கருவி நீ
எல்லாமும் எங்கும் நீயென்றால்
இணங்குகின்ற பக்தரெலாம்
வணங்குகின்ற இறையென்பார்
பிணங்கு கொண்ட நானோ
நன்றியுடன் இயற்கையென்பேன்
-----------

**இரவிக்குமார் 11-08-2020**

## மயங்கி விழுந்தேன்

-------------------------

மண்ணுக்குள்ளே; விதை விதைக்க,
மாண்பாய் மரஞ்செடி கொடியாதல் கண்டேன்!
கல்லினில் தேரை இருக்க
உள்ளுக்குள்ளே உன்னைக் கண்டேன்!


அலை கடல் மலை போல் எழும்பக் கண்டேன்!
ஆழத்திலும் உயிர்கள் வாழக் கண்டேன்!
அண்டவெளியில், ஆதவனும்;
அவன் ஒளியில் மதியுமே,
பால் வெளியில் பலவுமே,
கால் பதிக்காமல் மிதக்கக் கண்டேன்!

உதயம் அந்திமம் உருவாதல் கண்டேன்!
இதயம் இடைவெளியின்றி;
இயல்பாய் துடித்தலும்,
கண்கள் பார்ப்பதும் இமைகள் மூடித் திறப்பதும்;
எவனின் கட்டளை என,
எண்ணி எண்ணி வியந்தேன்!

நோய் வந்து, பாயில் படுக்க;
காயம் நோக கடுந்துயர் கொண்டேன்!
நேயமாய் மருத்துவன் வர,
மாயமாய் அது போதல் கண்டேன்!
பிறத்தலும் இறத்தலும் நித்தம் கண்டேன்!

எல்லாம் இறைவன் என்பதை அறிந்தும்,
பொல்லாப் போதனை கேட்டேன்!
கல்லாத புல்லனைப் போல் நானே,
மதமூர்க்க மடியில் மயங்கி விழுந்தேன்!

இன்னா செய்தார்க்கும்;
இனியவையே செய்வேனா!
இனியவை இல்லையேனும்,
மன்னிப்பைத் தருவேனா!
மன்னிப்பு இல்லையேனும்,
மனதிலே மறப்பேனோ!
மனதிலே மறக்காவிடினும்,
முன் நில்லாது மறைவேனோ!
மறையுமுன் மண்ணிலே இந்த,
மாண்புதனை அடைவேனா!
------- இரவிக்குமார்



## வறுமை - மனிதன்

------------------------------

சித்திரை வெய்யிலாய்த் தகிக்கும்!
நித்திரை யில்லா இரவுகள் சுகிக்கும்!
பத்தரை மாற்றுத் தங்கம் தோற்கும்;
நித்திலம் போல் குணமெனினும்,
முத்திரை குத்தி மூதேவியென;
இத்தரை தூற்றிப் புவியில் திரியும்!
சித்தராய் நல் அமைதி காத்து,
புத்தியை முனைந்துத் தீட்டி,
சத்தமின்றிச் சிறு சலனமின்றி,
நித்தமும் போராட வேண்டும்!



## ஹத்ராஸ் அவமானம்

--------------------

சீதையைச் சுடாத பெரு நெருப்பே!
பேதைகளை சுட்டெரிக்கத்
துணிந்ததேன்?
பாதைகளை அறியாத மூடரை;
பதறிச் சிதறுமாறு
பழித் தீர்க்காததேன்?

போக்கற்ற புல்லர்கள்
புத்தியின்றி,
நாக்கறுத்து நர குழியில் தள்ள
வாக்கரிசி போடவும் வாய்ப்புத் தராது;
காக்க வேண்டிய காவலரே,
கழிசடை ஆனாரே!

இராமன் உதித்த புண்ணியமண்ணில்,
காமன்கள் குதித்து களமாடுகிறார்!
தாமதமேன்? வாமன அவதாரனே!
வாளாய் இருப்பதென்ன சியாமளனே?

ஆதாரங்கள் அடுக்கடுக்காய் இருக்க;
அவதாரங்கள் நீயெனில்,
அடுத்தென்ன;
அவமானங்களை மிச்சமின்றி,
அழிப்பாயோ?
அவதானமின்றி சாவாதானமாய்ப்,
போவாயோ?!
--------- இரவிக்குமார்

## நெருப்பே எழுந்திரு!

----------------
நெருப்பே உனக்கு பொறுப்பு இல்லையா?
வருத்தும் மனிதரை வாட்ட,
துணிவில்லையா?
கண்ணகியின் வார்த்தையில்,
மாண்பு மதுரையை எரித்தாயே!
அழகியதோர் இலங்கையை அழித்தாயே!

அரக்கெரென,
அன்றொருநாள் வாலினால்,
யாருக்கின்று வால்பிடித்து;
தேரினில் வலம் வருகிறாய்!
பாரினில் பலம் இழக்கிறாய்!



கட்டி அணைத்தாலும்;
சுட்டு விடாமல் நின்ற நீ,
மூட்டிய பெருந் தீயில்,
வாட்டாது எம் சீதையை,
ஈட்டியதோர் பெரும்பேரை,
நாட்டினில் நாளும் இழப்பதேன்?

மயக்கும் போதை தனை;
கயவர்கள் விதைக்கிறாரே?
எளிய மனிதரை வதைக்கிறாரே!
உள்ளமுனக்கு பதைக்கவில்லையா?
கலகம் தெரியவில்லையா?
உலகம் புரியவில்லையா!
குழவி முதல் கிழவிவரை;
இழுக்கை விளைக்கிறாரே!

பழுத்த அனுபவம் கொண்ட நீயே,
பழவினையென பசப்புரைப்பாயோ?
எதிர்வினை ஆற்றாது;
எரிக்காமல் நிற்பாயோ!
பலர் பொருளை சிலர் சுருட்ட,
மலர் குவித்து மயங்குவாயோ!

செய்வதைச் செய்யாது நிற்க,
செய்வினை வைத்தவர் யார்?
நெருப்பே சுடுவது மட்டுமுன் சுபாவமல்ல;
நீதிக்காய் சுட்டெரிப்பதும் பாவமல்ல!
நெருப்பே நிமிர்ந்து நில்!
நியாயத்தை தொடர்ந்து செய்!
------- **இரவிக்குமார்**

## மகாளய அமாவாசை

மகாளய அமாவாசை; மனைவி
காகத்திற்கு சோறு வைத்தாள்!
பசு மாட்டுக்கு கீரையாம்;
வாசலில் கோலம் எறும்புக்கு,
நாய்க்கும் உண்ணக் கொடுக்க;
பைரவரா என்ன என்றேன்?
பரிகாசம் வேண்டாமென்றாள்!

பரிவுள்ள நம் தொன்மை நாட்டில்;
பாம்புக்கும் பால் வார்ப்போம்!
பல்லுயிரும் வாழ இங்கே;
பலப்பலவாய் பழக்கங்கள்!
சொல்லுக்குள் அடங்க வொண்ணா,
எல்லையில்லா வரைமுறைகள்!
கள்ளமில்லா வழி வகைகள்!

இருக்கும்போது, ஒரு கவளம்;
இனிதாய் நாமும் தந்திடுவோம்!
சென்றபின்னே இலைபரப்பி;
இன்று ஏது பல செய்தாலும்,
சென்று ஆங்கே சேர்ந்ததென;
எவரும் கண்டு சொன்னதில்லை!

## அம்மா!



கருவறையில் சுமந்து நின்று,
உருவமொன்றைத் தந்தவளே!
மூச்சுக் காற்றில் உயிர் ஈந்து,
பேச்சுக் கொடுத்து மொழி தந்தாய்!
பொறுமையே பொறாமை கொள்ள,
பெருமையைப் பேறாய்ப் பெற்றாய்!
வறுமையில் வீழ்ந்தவனாய்;
வெறுமையை உணர்கின்றேன்!
சித்திரத்தைக் தொலைத்து விட்டு,
பித்துகொண்ட குழந்தை போல;
சத்தமிட்டு நான் அழுதபோதும்,
சத்தமின்றி நீயும் போனாயே!
சத்திரமாம் வாழ்விதிலே,
நித்திரைக்கு போனவளே!
பத்திரமாய் இருப்பாயோ?
பவித்திரமாய் ஆனவளே!
நித்திலமே நீ என்றும் என் தாய்தான்!
பத்தரை மாற்றுத் தங்கமே!
இத்தரையில் உள்ளவரை என்றும்;
பக்தியுள்ள நானுந்தன் சேய்தான்!
ஒத்திசைவாய் உன் பெயர் சொல்லி,
எத்திசையையும் வணங்கி நிற்பேன்!
------- **இரவிக்குமார்**

# அவளும் நானும்

----------------------------

முப்பது வருடங்கள் முப்பது நாட்களாய் ஓடி ஒளிந்து கொண்டது!
வாழ்வின் பெரும்பகுதி;
காழ்ப்பின்றிஎன்னோடு இணைத்து விட்டாள்!
நான் நினைத்த பலவும் அவள் கணித்ததுண்டு!
அவள் கணித்த பலவும் நான் நினைத்ததுண்டு!



நீ அழகென்று ஒரு போதும் அவள் சொன்னதில்லை!
நான் மட்டும் பொய்யனா? என்ன பொய்யாய் பதிலுரைக்க;
உள்ளத்தின் அழகு வார்த்தைகளில்லை!
அது ஒளிந்து கிடப்பது; இணைகின்ற உணர்வில்தான்!

கண்ணீர்க் குளத்தில் மிதந்த போதெலாம்;
காணாமல் யாரும் கைக்குட்டையால் துடைத்தெறிவாள்!
கோபத்தில் கனலாய் கொதித்தபோதெலாம் வெறும்;
மவுனத்தில் அதை அணைத்துப் போடுவாள்!

காட்டிலே விட்டுத் தவிக்க விட்ட'
நளனுமல்ல நான்!
குபேரைக் கூடையிலே சுமந்த நளாயினுமல்ல; அவள்!
இந்த்கதைகளுக்கொன்றும் குறைவில்லை!

மந்தமாய் அவள் மனம் முணுமுணுத்தாலும்; என்,
பாம்புக் காதுகளுக்கென்னவோ,
தெளிவாய்க் கேட்கிறது!
அவள் வங்கிப் புத்தகமும், என் வங்கிப் புத்தகமும்,
அலங்கரிப்பது என்னவோ என் அலமாரியில்தான்!

குறைகளே இல்லா குடும்ப வாழ்க்கை;
அலைகளில்லா கடலைப் போல அழகற்றது!
அம்மா அடிக்கடி பொன்மொழி உதிர்ப்பாள்!
உண்ணக்கொடுப்பதும்; உடுக்கத் தருவதும்;
எண்ணிக்கையில் வராது!



இல்லற வாழ்க்கையில்,
உபதேசங்களுக்கு உயர்வில்லை!
உண்மையென அதைப் பின்பற்றாதவரை;
வாழ்க்கையை வழக்காடு மன்றத்தில் வைத்தால்,
குற்றவாளிக் கூண்டில் நான் மட்டுமே!

------- இரவிக்குமார்



# விநாயகனே!

விக்னங்களைத் தீர்ப்பவனே,
விக்ன விநாயகன் நீயே!
வல்வினை நீப்போனே!
வல்லப ஞால காப்போனே!


வேழ முகத்தோனே!
வெற்றி கொடுப்போனே!
மூஞ்சுறு வாகனனே!
முழுமுதற் கடவுளே!

ஞாலம் வலம் வந்து,
ஞானப்பழம் பெற்றோனே!
நம்பிக்கை கொண்டோர்க்கு,
தும்பிக்கையானே!

தும்பிக்கையுடைத்து
பாரதம் படைத்தோனே!
தூய மனத்தோர்க்கு;
நேயம் விளைப்போனே!

கணங்களின் அதிபதியே!
சைவர்க்கு செல்வ கணபதியே!
வைணவர்க்கு நீ ஆழ்வானே!
வையத்தோர் வணங்கினோமே!

உலகைக் காக்க எழுந்து வந்து,
பகையிலா படை படைப்பாய்!



# தாயாய் வருவாய்!



பொய்யென்று உணர்ந்தும்,
மெய் வளர்த்தேன்!
மெய்யென்று அறிந்தும்,
பொய் உரைத்தேன்!

வேயாத கூரை கீழ்;
வெயில் தவிர்த்தேன்!
பாயாத நதியில் குதித்து,
பாய்மரத்தை விரித்தேன்!

சீயான் சொன்ன வழி மறந்து,
ஓயாது ஓடி நல்வாழ்வு துறந்து;
மாயவலையில் மனம் மயங்கி,
சேயாகித் துவண்டு அழுதேன்!

ஆயிழையாய் அனுதினம் ஆகுதே!
சேயிழையாய் வாழ்வு மிளிருமோ?
நோய் வந்து நொந்து கிடந்து,
பாயில் படுத்து பொழுதும் சோர்ந்து,

காயம் காய்ந்து வற்றி,
வாயும் குழறி மாயுமுன்,
தாயாய் வந்து என்னை;
நீயே தாங்குவாய் தினமே!

# முருகா!

சித்தனும் நீ! என்றும், எந்தன் அத்தனும் நீ!
பித்தனின் புத்திரனும் நீ!
பத்திகளில் பக்தியை பாடி,
எத்தின்றி எத்தினமும் ஏத்தி நிற்பேன்!
அத்தி பூத்தது போல்,
அதிசயமென அவனியிலே;
ஏத்தாதோர் ஏத்தி நிற்க,
இத்தரை இன்று காணும்;
நித்திரையிலும் உன் நிசம் காண்பேன்!
நீள்திரை மீறியும் நின்;
நிழல் காண்பேன்!
சித்தி பெற, முக்தி தர,
சிந்தையுள் நிற்பாய்!



# கலைஞர்!



கற்கண்டு கவிதை என்று கேட்போமோ!
இனி கனிசுவை,
சொற்கேட்டு வியப்போமோ!
கலைஞர் என்பார் பலர்;
கருணாநிதி என்பார் சிலர்!
கருணையில்லை நிதிதான்;
கலைஞருக்குப் பெரிதென்பார்!

கயவர் என்பார்; சொல்லால்
சுட்டெரிப்பார்!
ஊழலின் ஊற்றென்பார்;
உலகத்தில் சொன்னவரெல்லாம்,
சாயியைஎதிர்த்தவரெல்லாம் மாயமாக;
நாத்திகம்தான் இவரென்றால்,
ஆத்திகம் அவர் குடும்பமாமே!
எள்ளித்தான் நகையாடுவார்!

துள்ளித் தானே வசைபாடுவார்!
சாய்பாபாவே அவர் பக்கம் சாய,
வாய்மூடாது வேறு சாயம் தேடி;
வாய்பேசாது மௌனிப்பினும்,
வரிசைக் கட்டி பார்த்துச் சென்றார்!

ஊழல் ஊற்றுஅவரென்றால்,
நாச நாத்திக மோச சுவரென்றால்;
பேசாதபோதே பிரதமர் முதல்,
பூசும் அரிதார நடிகன் வரை;
பார்த்துச் சென்ற காரணமென்ன?
பார்க்காத கடவுளே அறிவான்!

எதிர்ப்போரும் ஆளுமை கண்டு,
ஏத்தாதோர் இங்கு எவருமுண்டோ!
பயனடைந்தோர் பலரிருப்பார்!
பாதித்தோர் சிலரிருப்பார்;
ஒரு சேர பூமியில் அனைவருக்கும்,
ஒரு தலைவன்உலகுகண்டதில்லை!

நீயின்றி அரசியலில்லை!
நின் நினைவின்றியும் அது, விட்டதில்லை!
பேசுகின்றபோது; பேச்சுக்கு ஆளானாய்!

பேசாத போதும் நீ;
பேசும் பொருள் ஆனாய்!
மூச்சை நிறுத்திய பின்னும்,
வீசுகின்ற வாளுக்கு கேடயமானாய்!

மாசில்லா தலைவனெவனும்;
மண்ணினிலே பிறக்கவில்லை!
எல்லையின்றி இம்மண்ணில்,
இருந்தவன் எவனுமில்லை!

எல்லையின்றி ஏச்சுக்கள்;
மலைபோன்றுகுவிந்திடினும்,
தொல்லையதாய்க் கருதாமல்,
பகுத்தறிவு பலம் தடுத்திட்டதோ?

எதிர்த்து வந்த சாபமெல்லாம்;
உதிர்ந்து விழுந்துபோனதெல்லாம்,
கனிந்து மனம் வாழ்த்தியோரின்,
புண்ணியம் வந்து சேர்ந்ததாலோ!

ஆத்திகம் தான் மேன்மையென்று;
ஆதிவழி ஆழமாய்புகன்றபோதும்,
நாத்திகம்தான் வழியென்று,
நாளும் பொழுதும் சென்றதன்றோ!

ஆண்டவன்தான்; அனைவர்க்கும்,
தந்தையென்ற; ஆன்மிக அரிச்சுவடி,
நான் புகன்றால் பொய்யாமோ?

நானில நியதியென்றும்; ஆகாதோ?
ஆண்டவன் நீயுங்கூட ஐயமின்றி,
அவனின் ஒரு பிள்ளைதான்!
தூற்றுதலும்; போற்றுதலும்;
போகட்டும் தந்தைக்கேதான்!

------------- **இரவிக்குமார்**

மூச்சுக் காத்து அடங்கிப் போனா,
பேச்சு முடிஞ்சி போகும் பாரு!
முதலுமில்லே! முடிவுமில்லே!
கடவுள் அவன் பேரு!
உருவமாக்கி பேரு வச்சோம் நமக்குள்ளே!
உயர்வு இல்ல தாழ்வு இல்ல அதுக்குள்ளே,
சொர்கமுண்டு! நரகமுண்டு!
சொன்னவன் பல பேரு
கண்டு களிச்சு, இங்கே சாட்சி சொன்னவன்
யாரு?
வாழும் இந்த பூமிதானே!
இரண்டும்

அன்று,
சொல்லுக்குள்ளே சுவை வைத்தார்!
சுவை கூட இசையை, மீட்டினார்!
இசைவுடனே இறை வளர்த்தார்!

இன்று,
நெல்லுக்குள்ளே அரிசி போல,
உள்ளுக்குள்ளே உயர்வு போற்றாது;
பல்லுக்குள்ளே விஷம் வைத்தார்!
பாம்பாகிப் படமெடுத்து;
கறுப்பர் என்றார்! பதராகி நின்றார்!
எதிர்த்தவர் காவியென்றார்,
மனிதத்துள்ளே பகை வளர்த்தார்!
அரசியலுக்காய் அணி பிரிந்தார்!

எல்லைக்குள் அடங்கா இறைவனுக்கு;
எல்லை வைப்போர்,
என்றும் நமக்குத் தொல்லையே!

சதிராடிய வாழ்க்கையில் ,
எதிரி என்று யாருமில்லை !
எதிர்காலம் அறிந்ததில்லை!
பதராய்ப் பறி போனதேயென ,
பதறி அழுததும் இல்லை!
புதிர் இன்றி புனிதமுமன்றி!
நதி வழி நீரோட்டம் போல்,
விதி வழி சென்றதே வாழ்க்கை!
மீதி மீறி புது வழி செல்லுமோ?
மதில் மேல் பூனையென;
எதில் செல்வதென மயங்கி,
பதிலின்றித் தயங்கி நிற்குமோ!
------ இரவிக்குமார்

# வறுமையின் வடுக்கள்

கனவுகளில் நனவாக,
களித்தோடும்
நனவுகளில் கனவாக!

கூத்தாடும்
கண்ணீர் வழிந்து,
கரை தாண்டாது!

நெஞ்சக்குழியுள்;
வழிந்தோடி,
பசிக்கின்ற வயிறை,
பாங்காய் நிரப்பும்;

உதடுகள் உலர்ந்து,
கண்ணீர்த்துளியின்;
ஈரத்துக்காய் தவமிருக்கும்!

நெஞ்சங்கே நிமிர்ந்திடும்!
கால்கள் மட்டும் தள்ளாடும்!
மானங்காக்கும் ஆடைகூட,
மனசாட்சியின்றி சாட்சியாக,
கிழிசல்களில் பல்லிளிக்கும்!

இருட்டில் கடக்க; வழி நெடுக,
இயலாமையில், கால் தடுக்க;
குருடனுக்குக் கைத்தடியாய்,

நம்பிக்கை ஒன்றே படியாய்,
வெளிச்ச விடியலுக்காய்;
விடியும் வரை காத்திருக்கும்!

வறுமை ஆக்கிய வடுக்கள்;
வசதி வாய்ப்பு வந்தபின்பும்,
சட்டைகளின் பொத்தான்களாகி,
நினைவுகளை மூடியிருக்கும்!
------- இரவிக்குமார்



# வாழ்க்கை!

வாட்களால் வளைத்தெடுத்து,கோளையே ஆண்டாலும்;
நாட்களில் கணக்கு பார்க்க நாற்பதாயிரம் தாண்டுமா?
சாத்திரம் படித்தாலும்; சரித்திரமே படைத்தாலும்,
சத்திரமாம் வாழ்வதிலே; நித்திரையே பெரும்பகுதி!
மறைந்தபின் மெதுவாய் மறந்து போகும் மாயவலை!
கருவறையில் இருட்டு கணப்போதில் வெளிவர வெளிச்சம்!
உயிர் பிரிந்து; உருமறைந்தபின், இருட்டே எச்சம்!
பிறத்தலும்; இறத்தலும்; சுழற்சியென்று,
பெருத்த உண்மை பொருத்தமென உணரின்,
நித்தமும் இனிதே! மொத்தமும் மகிழ்வே! 19-12-20
19-12-2020

## பதவி!

செத்த பின்பும்
பதவியென்பதை,
வைத்துத் தைத்த மனிதன்;
வையத்தின்
அசாத்திய அதிசயமே!

சுவர்கமும் நரகமும்
வாழுமிந்த பூமிதானே!

பாழான இதயத்துக்கு,
பார்ப்பதெல்லாம் நரகம்தானே!
சுவரில்லா இதயமிங்கே,
சுவர்கத்தின் வாசல்தானே!
25-12-20

## குடும்பங்கள்

பூட்டாத அறைகளிலே,
திறந்து வைத்த மனங்களாய்க் கூட்டுக்குடும்பம்!
ஒரு கை உயர, ஒரு கை தாழ,
கைகோத்து ஒன்றாய் நடந்தது,
சித்தப்பனும் ,பெரியப்பனும்
அண்ணனும் தம்பியும்
தாத்தனும் பாட்டியும் தடைகளாய்;
தனிமை இனிமையென,
தனித்திருக்க மனம் தவியாய் தவித்தது!

மனக்கதவுகள் அடைபட்டு,
மகிழ்வொன்றே பிரதானமென;
தனிக்கதவுகள் தாளம் போட்டுத்,
தாளிட்டுக் கொண்டது!

சிறைபடுவதாய்,
நினைத்த பறவைகள்;
சிறகை விரித்து வெளியே பறந்தது!
**யாதும் ஊரே! யாவரும் கேளிர்!;**
சட்டென்று நினைவு வர,
**கற்றபின் நிற்க அதற்குத் தக!**
என்பதை ஏற்க;

அட்டகாசமான அபார்ட்மண்டுக்களில்
அலை அலையாய் நுழைந்தது!
28-12-20

## வாழ்க்கை!

வாழ்க்கை எனும் நெடும் பயணம்;
வழித்துணையாய் வந்தவர் எவர்?
வீழ்ந்ததற்கு கணையாய் யார்?
வாழும்வரை பிணையென யார்?

கைகாட்டி நின்றவர் பலர்;
கைதூக்கி விட்டவர் சிலர்;
தூரத்தே நின்றவர் பலர்;
துரத்தி வந்தவர் சிலர்!
தொலைந்து போனவர் சிலர்;
கலைந்து போனவர் சிலர்!

பழையென எல்லாம் கழிந்து,
புதியன புகுதல் போலே,
அன்னியங்கள் சில அருகில்;
நெருக்கங்கள் பல தொலைவில்;
நட்பும் நல் உறவுகளும்,
நடப்பவைகளில் அடக்கம்!

நல்லதும், கெட்டதும், வாழ்வில்;
நடந்தவை யாவும் நினைவில்!
எதிரி மட்டும் இதுவரை இல்லை!
இனியும் எப்போதும் இல்லை!

**- க.இரவிக்குமார்**

**06-02-21**

## தத்துவங்கள்! (08-11-20)

காற்று நின்று வெற்று உடலாய்க் கிடந்தான்!
உற்றவரும் சுற்றத்தாரும் கூடி நின்று அழுதார்!
மாற்று கருத்துக் கொண்டவரும்,
பேரைச் சொல்லி பேறைத் தூக்கி;
நிறைதனை நிறையச் சொன்னார்!

காதறுந்த ஊசியும் காணாது கடை வழிக்கே
போதனையை நினைவு கூர்ந்தார்;
காடுவரை சென்றவர்கள்,
கண்எதிரே ஊணதுவும்,
சாம்பலாதல் கண்டபோதும்,
வீடுவந்து சென்றதுமே,
வேறு உணர்வில் வீழ்ந்தார்!

கொடுத்ததென்ன? வாங்கியதென்ன?
அடுத்தடுத்து குறிப்புகளைத்;
தொடுத்தெடுத்து முடித்தார்!

சூழ்ந்து நின்று, சொத்தை ஆராய்ந்தார்!
வாழ்ந்து நின்ற போது வைத்ததென்ன?
பத்திரங்களை ஆய்ந்தார்;
யாருக்கென்ன பங்கு என்று,
ஊர்சொல்லும் நியாயத்தை,
ஊன்றி அவர் சொல்லி நின்றார்!

வருவதைவிட வாங்கியது அதிகமென்றால்,
வந்தவர்கள் சந்தடியின்றி,
நொந்து கொண்டே சென்றார்!

முத்துப் போன்ற தத்துவங்கள்;
செத்துப் போன மனிதர்க்கன்றி,
நித்தமது வாழுகின்ற மனிதர்க்கில்லை!
சத்திரம் போல் வாழ்க்கையதில்,
நித்திலம் போல் வாழ்ந்துவிடு!
தத்துவம் இதுவே தழைக்கின்ற பூமியிது!

## வினை தீர்ப்பாயோ?

வெண் மதியைத் தலையில் வைத்து,
கண் மத்தியில் கனலாய்த் தெறித்து;
நுண் விதியை நொடியில் தீர்க்கும்,
விண்ணவர் அதிபதி வேதத்தின் தலைவனே!
என் பதியாம் ஆடலில் வல்லோனே!
தன் மதியிழந்து தணலில் தவிக்கிறேனே!
மண் மீதினில் விழலாய் வீழுமுன்னே!
மனம் வைத்து வினை தீர்ப்பாய் ஏகம்பனே!
**10-02-21**

## தாங்குவேனோ வேலவனே!

ஆற்று நீரில் நாமஞ்சொல்லி நீராடலில்லை!
நெற்றியிலே பட்டையாய் நீறுமில்லை!
பற்று கொண்டு பூமாலைச் சூடவில்லை!

பற்றும் கவனமுடன் அசட்டையின்றி;
சுற்றி வலமில்லை உனை சட்டையின்றி;
சற்றே மனம் நிற்பதென்ன!
நிட்டையின்றி, வெற்று மவுனம்
நீள்வதேனோ பாட்டையிலே!

பற்களால் பூனைக் கவ்வி தன் குட்டியை,
வேறிடம் தானேக் காத்து சேர்ப்பதே போல்,
தேங்காயில் உறைந்த இனிய நீரெனவே,
தேம்பும் வேண்டலின்றி நீயே என்னுள்ளே!

தூங்கி விழித்தவுடன் பலரும் பாரினிலே;
ஏங்கித் தவிக்கும் எண்ணிக்கை;
ஏராளமாயிருக்க நீங்காது நீயும்;
காணிக்கையன்றி நிறைந்ததேனோ!

பாங்காக உதித்தப் பரமன் பாலகனே!
தாங்குவேனோ நின்னன்பை வேலவனே!
**18-02-21**

இன்னா செய்தார்க்கும்
இனியவையே செய்வேனா
இனியவை இல்லையேனும்
மன்னிப்பைத் தருவேனா
மன்னிப்பு இல்லையேனும்
மனதிலே மறப்பேனோ
மனதிலே மறக்காவிடினும்
முன் நில்லாது மறைவேனோ
மறையுமுன் மண்ணிலே இந்த
மாண்புதனை அடைவேனா
------- இரவிக்குமார் 04-09-2020

எதை எடுத்துரைப்பேன்?
ஏது உரைக்கினும், நான்
வாது செயினும், தீதுரைக்கா
ஏதுவான நல்ல மூதுரையாய்;
நீதிசொல்ல மீதி வாழ்க்கை
சோதிக்காது போதிப்பாய்!
நாதியற்ற எனக்கு,
வழக்குரைக்க; வாதியென,
வந்தருளே ஏகம்பனே!
------- இரவிக்குமார் 26-05-2020



## சி(சீ)வன்

கங்கை வார் சடையனென்பார்
கணங்களை உடையவனென்பார்
மூவரில் ஒருவன் அவன் என்பார்
முக்கண்ணை ஏந்தியவன் என்பார்

பாரினிலே அவனே பரமனென்பார்
பார்வதியின் துணைவனென் பார்
தில்லையிலே கூத்தன் என்பார்
கயிலையிலே நாதன் என்பார்

நஞ்சினை உண்டதால் நீலகண்டனென்பார்
அஞ்சாதே நமசிவாய என்பார்
அட்டமாசித்தி பெற்றதால், சித்தன் என்றார்
ஆடும் பேய்களுடன் ஆடியதால் பித்தன் என்றார்
ஆண்டவனும் ஆண்டியாகி,
திருவோடு ஏந்தியவன் என்பார்!

அயனும் மாலும் அடிமுடி காணா,
பிழம்பாய் நின்றவனே என்பார்
திரிபுரம் எரித்தவனே என்பார்
திரிபுரசுந்தரி மணாளனே என்பார்

எத்தனைப் பெயரால் எவரும் அழைக்கினும்;
அத்தனை அவரவர் நினைப்பில் வணங்கிடினும்;
சிந்தனை எனக்கொன்று உண்டு!
நிந்தனை இல்லா நினைப்பதிலே
அகத்தின் உள்ளே அகந்தையின்றி
அகிலத்தின் வாழ் உயிரெலாம்
அவனன்றி வேறல்ல அறிவோமே!
அன்பே சிவம் சீவனே சிவன் உணர்வோமே!
12-03-21

---

தன்னை அறியாதோர்;
தரணி யாண்டதுண்டு!
தன்னை அறிந்தோரை
தரணி வணங்கியதுண்டு!
விஞ்ஞான நவ யுகத்திலே,
விண்மீது உயரப் பறந்தாலும்;
விடியலுக்குள் தரை தட்டும்!
விந்தையான நிலையற்ற உலகமிது!
என்னையறிய எண்ணம் வளர்த்து,
தன்னை அறிய தகுதியுறுவேனா?
தரணியில் மற்றவர் போல்,
ஓரணியில் உற்று மறைவேனா!
------- இரவிக்குமார் 22-10-20

---

## மகளிர் தின வாழ்த்து!

மகளிர் தினமாம் இன்று!
முச்சந்திக்களில் கொண்டாட்டம்
முகநூலில் **வாழ்த்துகள்!**
முகமலரும் எமோஜிக்கள்!

படங்களில் நம் தெய்வமாய்,
ஆலயங்களில் நல் அற்புதமாய்,
கற்பில் கண்ணகிகளாய்;
கனல் கக்கும் கதா பாத்திரங்களாய்,
நதிகளின் பெயர்கள் தாங்கி,
நடமாடும் மண்ணும் அவளாகி,
எல்லாமும் அவளாகி நின்றவளை;
எல்லையிலா பண்புகள் நிறைந்தவளை;
தொல்லையின்றி விடுதலுண்டோ!

தொல் நாட்டில் அல்லலன்றி;
பிஞ்சுகளை நன் நெஞ்சமின்றி,
அஞ்சாமல் கொன் றழிப்போரை,
வஞ்சமுடன் நஞ்சாய் மகளிரை,
வாஞ்சையாய் வலிந்து வளைப்போரை,
வயதானாலும் விடாது,
வன்புணர்வு செய்வோரை;
காவலரே வேலி தாண்டிக்
கயமை செய்யும் நிலையிங்கே!

துர்பாக்கியமென நீதிகூட,
துன்மார்க்கமாய் நாதியற்று;
நன்மதிப்பற்று போனதற்கு,
நாட்டினிலே யார்பொறுப்பு?

கற்புக்கு அணியென,
அழகுக் கதை சொல்லி,
விற்பனைப் பொருளாக்கி,
விந்தை செய்யும் நாடிது!

தன்னை ஈந்த தாய்தனையே,
தன்னலமாய் விடுதியில் விட்டு;
தகிடுதத்தம் செய்திடும் நல்ல
தனயன்கள் வாழும் அன்பு பூமியிது!

வார்த்தைகளால் வடை சுடாமல்,
வாழ்க்கையில் விடை தருவோமா?
08-03-21

## ஏ மனமே!

ஏ மனமே சும்மாயிரு! அலையாமல்,
போ மனமே போய்க் கல்லாயிரு!
கடுகளவும் கலகத்தைக் கல்லாதிரு!
செய்த உதவி
சபைதனிலே சொல்லாதிரு!
பெற்ற உதவி சொல்லாமல் மறைக்காதிரு!

உப்புக் கல்லை வைரமுன்னு சொல்லாதே!
வைரங்கூட கரிக்கல்லுதான்;
கர்வம் கொள்ளாதே
உப்புக்கொரு உன்னதப் பயனிருக்கு!

உவகை தனைத் தள்ளாதே!
வன்மும் துரோகமும் நினையாதே!
பூமரங்கா வந்து தாக்கும் துணியாதே!
இளமையென்ன? நல்ல வளமையென்ன?
எதுவுமே உலகில் நில்லாதே!
மூச்சு அது நின்னு போனா,
முடிஞ்சு போகும் தன்னாலே! 03-11-20



## மறு.........

வழக் கொழிந்த மொழிதனிலே,
வழுவி நிற்கும் தத்துவத்தை;
நழுவி நின்று நகைத்திடாது,
தழுவிக் கொள்ள யார் துணிவார்?

பழைய பஞ்சாங்கத்தைத் தூக்கி,
பரண்மீது வீசி எறியாது,
விழைந்து விரும்பி குழைந்து;
பாய் போட்டு சிலர் படிப்பார்!

சமத்துவமின்றி வெறும்;
சலிக்கின்ற அபத்தமென்றால்;
தத்துவங்கள் பெரும் மகத்துவமாக,
சத்தியமாக இன்று வழியுண்டோ?
புத்தனாகி சித்தியடையத் தேவையன்று,
புத்தியுள்ளோர் உணர்ந்து கொள்வார்!
26-10-20

## அவன்!

எல்லையில்லாதவன் அவன் என்பான்
எங்குமிருப்பவன் இறைவன் என்பான்
பொன்னை உருக்கி பொற்சிலை செய்தான்
கல்லைச் செதுக்கி கற்சிலை செய்தான்
கருவறை உள் வைத்துக் கடவுளென்றான்
கதவுகளால் மூடி சாவியை எடுத்தான்

அவனைக் காக்க இயக்கமென்றான்
ஆகமமென்றான் அதை மீற பூகம்பமென்றான்
சாத்திரமென்றான் சடங்கு என்றான்
சங்கம் என்றான் சங்கமம் என்றான்
எல்லாம் காப்பவன் இங்கு!
அவனென மனிதன் மறந்தான்!

காற்று மெல்லத் தவழ்ந்த போது,
போற்றி அவனைப் போர்த்துக் கொண்டேன்!
பூவின் வாசம் நுகர்ந்த போது,
பூமியில் சுவர்க்கம் அவனே என்றேன்!
நாவில் சுவையை உணர்ந்து;
நாதன் சுவையே என்றேன்!
வலியில் கண்ணீர் பெருக;
வலியும் அவனென்றேன்!



களிப்பில் கண்ணீர் பெருக;
கடவுள் கண்ணீரென்றேன்!
இதயம் நிதந் துடிப்பதும்;
இமைகள் மூடித் திறப்பதும்,
உதயம் ஆவதும் பின்பு;
அஸ்தமனம் அடைவதும்,
எல்லாம் அவனே என்பேன்!

எங்கும் நிறைபவன் என்பேன்!
உள்ளது என்பதை உணர்ந்தபின்,
உள்ளொளி உள்ளே ஒளிரும்வரை;
உயிரொடு நான் இருப்பேனோ!
உன் ஒளியை உள்ளத்தில் நிறைப்பேனோ!
------- **இரவிக்குமார்** 16-10-20



# அவளும் நானும்

முப்பது வருடம் முப்பது நாட்களாய்
விரைவு வண்டியென கண்முன்னே
கடந்ததே!
சுயம் வரத்தில் மாலை சூட இல்லை!
சுதந்திரமாயும் வரவில்லை!
சுற்றிநின்ற சுற்றங்களால்,
பற்றி நின்றே இணைந்திட்டாள்!

ஊழ்வினையின் பயனோ அறியேனே!
காழ்ப்பின்றி கணநேர வெறுப்பின்றி,
தாழ்ப்பாளாய் வாழ்வின் கதவுக்கு,
பழுதின்றி பலமாய்ப் பொருந்திட்டாள்!

மாமியாருடன் மருமகள் சண்டையில்லை!
மமதையில் தானென்று,
மறந்தும்காட்டியதுமில்லை!
கோபத்தில் நான் கனலாய்க்
கொதித்தபோதெலாம்;
மவுனத்தில், அதை
அணைத்திடுவாள்!
நான் கோடிட்ட போதெல்லாம்;
கோட்டை அவள் தாண்டியதில்லை!
அவள் கோடு போட துவங்குமுன்னே;
நான் மாடுபோல மிதித்ததுண்டு!



பாதகம் எதுவும் நான் செய்ததில்லை!
பதற்றமாய் வாழ்க்கையை வைத்ததுமில்லை!
வாதத்தில் நான் வென்றாலும்;
நீதி என்றும் அவள் பக்கமே!
ஆணாதிக்கம் ஆண்மையென்று,
அறிவின்றி மயங்கி நிற்க;
அன்பில் கரைதலே ஆண்மையென,
அறிந்திடவே அகவை அறுபது பிடித்தது!

கடந்தது கடந்தவையாகட்டுமே!
நடப்பவை நல்லவையாகட்டும் எனில்,
காலங்கடந்து விட்டதே என்பாள்!
கடந்துவிட்ட காலத்திற்கு நான் பொறுப்பு;
கடக்கப் போகும் காலத்திற்கு கை கொடு
என்றால்,
கண்களில் நீர் கசிய;
புன்னகையால் சம்மதிப்பாளோ!
03.02.2021

# விடலை!

மண் குதிரையாய்மண்ணிலிறங்கி,
மரக் குதிரையில் மகிழ்ந்தாட,
வருவோர் போவோர்முத்தமழையை;
சத்தமாய் பதிந்த காலம்,
புத்தாடை அணிந்து நின்றால்,
பத்து நாள் கழற்ற மறுக்கும்!

நித்தம் அது கிடைக்குமா என,
சத்தமின்றி நினைத்து மறக்கும்!
பாய்போடுமுன்னே தூங்கி விழும்,
படுத்த உடனே உறங்கி விடும்!
நேற்றையது நினைவிலில்லே!
நாளைய பொழுதும் கவலையில்லே!

நித்தம் புதிதாய் உதித்தோமே!
மொத்தமாய் நித்தம் மகிழ்ந்தோமே!
சின்ன சின்ன ஆசைகளாய்;
சட்டென மறையும் சினங்களாய்,
வஞ்சகமும் தீமையும் அறியாது;
தஞ்சமென தாயும் தந்தையுமாய்,
அஞ்சல் இல்லாத வாழ்க்கையாய்,
அழகிய மெல்லிய சீழ்க்கையாய்;
வாழ்ந்திட்ட காலமன்றோ!
வந்திடாதோ மீண்டுமது?
-------- இரவிக்குமார் 28-04-2020

# சித்தன் வந்து..!

நித்தமொரு சித்தன் நின்று,
நித்திரைக் கனவில் வந்து;
பத்தமுடன் சந்தம் தந்து,
பக்தியுடன் பாடல் பண்ண;
பித்தன் எனைப் பணித்திட்டார்!
கற்றளியின் கற்சிலை காணாது,
கற்றறிந்த பற்று கொண்ட;
உற்றறிந்த மொழி கொண்டு,
பள்ளத்தில் பாயும் வெள்ளமென,
உள்ளத்தின் உள்ளே துளைத்து,
கள்ளத்தை முழுதும் தூர்த்து,
கொள்ளை கொண்ட என்னவனை,
எல்லையில்லா இறைவனை;
பத்துடை எளிய அடியவன்,
எத்திசையும் நோக்கி நின்று,
ஏத்தி நன்றே பாடுவேன்!
------- இரவிக்குமார் 17-02-2020